மோட்டார் வாகனங்கள் விபத்து இழப்பீட்டுக் கோருரிமைத் தீர்ப்பாயம், சென்னை

(I சிறப்பு நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை)

முன்னிலை : திரு. எஸ். வடிவேல், பி.எஸ்.சி, பி.எல்.,

I சிறப்பு நீதிபதி, சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13-ஆம் நாள் வியாழன் கிழமை

மோ.வா.வி.இ.கோ.தீ. மனு எண். 666/2017

(CNR No.TNCH09-000868-2017)

1. Mrs. Gunamathi,
W/o. Subramanian V.R.

2. Mrs. Dhanalakshmi,
W/o. Anand

3.Mr.Lakshmi Narayanan,
S/o. Subramanian V.R.

4. Mr. Prabakaran
S/o. Subramanian V.R.

5. Mrs. Dhanapackiyam (Since Died)
W/o. Veerappan

All are residing at:
No.1, Mount Poonamallee High Road,
A4, Mount View Apartment,
Nandambakkam, Chennai-600 089.
Amendment Carried out MP No.9/2026
ordered dated 06.04.2026 ....Petitioners

//Versus//

1. Driver
C/o. Tamil Nadu State Express
Transport Corporation
Trichy Branch,
Trichy.

2. The Managing Director,
Tamil Nadu State Express
Transport Corporation,

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:10 +0530

Pallavan Salai, Chennai-2

3. Chola M.S. General
Insurance Dare House,
2nd Floor, No.2,
NSC Bose Road, Chennai -1 ....Respondents

இம்மனு 22.07.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு/திருமதி. R. Kannan, S. Kanniah, G.R.Kannan அவர்களும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர திரு/திருமதி. K.Azhagu Raman அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N. Vijayaraghavan அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதங்கள் கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்,

உத்தரவு

1988 வருட மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 166 மற்றும் மோட்டார் வாகன விதி 3ன் கீழ் இம்மனுவானது மோட்டார் வாகன விபத்தில் இறந்து போன சுப்பிரமணியன் என்பவரின் இறப்பிற்கு ரூ.1,20,00,000/- இழப்பீடு கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

1. மனுவின் சுருக்கம்

இந்த மனுவில் குறிப்பிட்ட விபத்தில் காலமானவர் கடந்த 14.09.2016ம் தேதி பிற்பகல் சமார் 03.15 மணியளவில் காலமானவர் ஓட்டுநராக TN 22 CQ 1116 என்ற பதிவெண் கொண்ட இன்னோவா காரினை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் NH 336 புதுக்கோட்டையிலிருந்து சென்னையை நோக்கி மாத்தூர் காவல்நிலையம் மற்றும் மாத்தூர் தென்னம்பிள்ளை பஸ்நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்த போது, அதே நேரத்தில் அதே

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:15 +0530

சாலையில் எதிர்திசையில் தவறான பாதையில் வந்த TN 01 AN 0923 என்ற பதிவெண் கொண்ட மாநகர பேருந்து ஓட்டுநர் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி காலமானவர் ஓட்டிச் சென்ற கார் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும்,இந்த விபத்தில் காலமானவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், இந்த விபத்து 2ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டதாகவும், காலமானவருக்கு சொந்தமான வாகனம், 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விபத்தில் சுப்பிரமணியன் என்பவர் காலமாகி விட்டதினால் எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.1,20,00,000/-ம் மற்றும் வழக்கு செலவு தொகையும் வழங்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. (a) <u>2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>

2ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், காரின் ஓட்டுநர் (காலமானவர்) தான் விபத்துக்கு காரணம் என்றும், அதனால் இந்த 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எதிருரை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

2. (b) <u>3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>

3ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானது, அற்பமானவை என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும்,

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:21 +0530

மனுதாரரின் வயது, தொழில், முகவரி மற்றும் விபத்து நடந்த விதம் போன்றவற்றை இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும், மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், பேருந்தின் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாகவும், காலமானவர் காரின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் என்றும், காலமானவருக்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் இடையே உள்ள ஒப்பந்தமானது தனிநபர் சேதாரம் மற்றும் விபத்திற்கானது என்றும் அதில் காலமானவர் 3ம் தரப்பினர் அல்ல என்பதாலும் இந்த 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எதிருரை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்,

1. மனுதாரரின் கணவர் விபத்தினால் ஏற்பட்ட இறப்பு 14.09.2016ம் தேதி பிற்பகல் சுமார் 03.15 மணியளவில் TN 01 AN 0923 என்ற பதிவெண் கொண்ட மாநகர பேருந்து ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவின் காரணத்தால் ஏற்பட்டதா?
2. இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா?
3. மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் எவ்வளவு கிடைக்கக்கூடியது?

4. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். மசா2 விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக மூசாஆ1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.1 விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக எமசாஆ1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.2 விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக எமசாஆ2 மற்றும் எமசாஆ3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இத்துடன் இருதரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுள்ளது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:27 +0530

5. மனுதாரர்கள் தரப்பு வாதத்தின் சுருக்கம்

5.1. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், இந்த மனுவில் குறிப்பிட்ட விபத்தில் காலமானவர் கடந்த 14.09.2016ம் தேதி பிற்பகல் சுமார் 03.15 மணியளவில் காலமானவர் ஓட்டுநராக TN 22 CQ 1116 என்ற பதிவெண் கொண்ட இன்னோவா காரினை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் NH 336 புதுக்கோட்டையிலிருந்து சென்னையை நோக்கி மாத்தூர் காவல்நிலையம் மற்றும் மாத்தூர் தென்னம்பிள்ளை பஸ்நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்த போது, அதே நேரத்தில் அதே சாலையில் எதிர்திசையில் தவறான பாதையில் வந்த TN 01 AN 0923 என்ற பதிவெண் கொண்ட மாநகர பேருந்து ஓட்டுநர் வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி காலமானவர் ஓட்டிச் சென்ற கார் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும்,இந்த விபத்தில் காலமானவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டதாகவும், விபத்தில் சுப்பிரமணியன் என்பவர் காலமானதற்கு உரிய இழப்பீடு வழங்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டுமென குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

5.2. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது எழுத்துமூலமான வாதுரையில் மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், கார் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

5.3. 3ம் எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் மனுதாரர் சொல்வதுபோல் ஒரு விபத்து நடைபெறவில்லை என்றும், பேருந்து ஓட்டுநர் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்து

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:33 +0530

ஏற்படுத்தியதாகவும், காலமானவர் காரின் உரிமையாளர் என்றும், காலமானவருக்கும், 3ம் எதிர்மனுதாரருக்கும் உரிய 3ம் நபர் குறித்து காப்பீடு இல்லை என்றும், தனிநபர் விபத்து இழப்பீடாக ஏற்கனவே ரூ.2,00,000/- வழங்கப்பட்டுள்ளது என்றும் அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று குறிப்பிட்டு வாதத்தை முன்வைத்துள்ளார்.

6. பிரச்சனை – 1க்கான தீர்வு:-

6.1. மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 மனு சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் நடந்த விபத்தை உறுதிபடுத்தும் வகையில் விபத்து நடைபெற்றது குறித்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.3 ஆக இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விபத்து குறித்து புகார் அளிக்கப்பட்டு அதற்காக மாத்தூர் காவல்நிலையத்தில் 2ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு எதிராக குற்ற எண்.150/2016ல் இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A)-ன் கீழ் 14.09.2016ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இருப்பதாக அறிய முடிகிறது.

6.2. மேற்கண்ட ம.சா.1 வாய்மொழி சாட்சியம், ம.சா.ஆ3 முதல் தகவல் அறிக்கையை காணும்போது மனுதாரர்கள் சொல்வது போல் ஒரு விபத்து நடந்து அதில் சுப்பிரமணியன் என்பவர் காலமாகி உள்ளார் என்பது தெரிய வருகிறது. இறுதி அறிக்கை மூசாஆ1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையில் பேருந்தின் ஓட்டுநர் மீது கவனக்குறைவு உள்ளதாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

6.3 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் பேருந்தின் ஓட்டுநர் நீலமேகம் என்பவர் எசா1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக எமசாஆ1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:39 +0530

எசா1 தன்னுடைய சாட்சியத்தில் கார் வாகனம் அதிவேகமாக வருவதை பார்த்து ஒலி எழுப்பி வேகத்தை குறைத்து பேருந்தை நிறுத்தும்போது கார் வாகன ஓட்டுநர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி ரோட்டின் மையப்பகுதியை தாண்டி பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் முதல் தகவல் அறிக்கை எசா1ன் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை மூசாஆ1ல் எசா1ன் மீது கவனக்குறைவு உள்ளதாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு எதிராக எசா1 எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காலமானவர் மீது காவல் நிலையத்தில் எசா1 எதிர் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனவே, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சியம் நம்ப தகுந்ததாக இல்லை என்று இத்தீர்ப்பாயம் கருதுகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சங்கதிகளான 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை சம்பவ நாள், நேரம், இடத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. அதன்படியே வினா எண்1 ற்கு விடை காண்கிறது.

7. **<u>பிரச்சனை எண் 2க்கான தீர்வு</u>**

காலமானவர் தன்னுடைய காரை 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்துள்ளார். மேற்படி காருக்கு 3ம் தரப்பினர் காப்பீடு செய்யப்படவில்லை. சாலை விபத்தில் காலமான நபர் மேற்படி காரின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் என்பதால் அவர் 3ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டிற்கு 3ம் தரப்பினர் அல்ல. எனவே விபத்தில் காலமான சுப்பிரமணியன் என்பவரின் இறப்பிற்கு இழப்பீடு கொடுக்க 3ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல. அதேசமயம், விபத்தானது 14.09.2016 அன்று 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 AN 0923 என்ற பதிவெண் கொண்ட மாநகர பேருந்து ஓட்டுநர் தான் இந்த விபத்திற்கு காரணம் என்று தீர்மானித்துள்ள நிலையில்,

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:44 +0530

2ம் எதிர்மனுதாரர் மேற்படி சாலை விபத்தில் மனுதாரர்களுக்கான இழப்பீட்டினை வழங்க பொறுப்பானவர் என்பதாக இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

8. பிரச்சனை எண் 3 க்கான தீர்வு:-

(அ) பிரச்சனை 1ற்கு 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 01 AN 0923 என்ற பதிவெண் கொண்ட மாநகர பேருந்து ஓட்டுநரால் விபத்து ஏற்பட்டது என்பதும், இழப்பீட்டுத் தொகையினை 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்தவேண்டுமென தீர்வு காணப்பட்டுள்ளதாலும், விபத்தின் காரணமாக சுப்பிரமணியன் என்பவர் காலமாகிவிட்டார் என்பதை ம.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை நகல், மசாஆ5 இறப்பு சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

ம.சா.ஆ.6 வாரிசு சான்றிதழின் படி மனுதாரர்கள் காலமானவரின் வாரிசுதாரர்/சார்ந்தவர் என்று அறிய முடிகிறது. இந்த மனு நிலுவையில் இருந்தபோது 5ம் மனுதாரர் காலமாகிவிட்டார். எனவே மேற்கண்ட மனுதாரர்கள் மனு இழப்பீட்டு தொகையை பெற தகுதி உடையவர்கள் என இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது. இனி பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர்கள் பெறத்தக்க இழப்பீடு தொகைகள் குறித்து ஆராய வேண்டியது அவசியம் என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

(ஆ) Smt. Sarla Verma & Ors. vs. Delhi Transport Corporation & Anr. (2009) 4 MLJ (SC) 997 என்ற தீர்ப்பினில் பத்தி 9ன்படி காலமான நபரின் வயது மற்றும் வருமானத்தை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

(இ) **காலமான நபரின் வயது**

விபத்து சமயத்தில் காலமான நபரின் வயது குறித்து ஆராய்கையில் காலமானவரின் மசாஆ5 இறப்பு சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.7 பிரேத பரிசோதனை அறிக்கை, மசாஆ8

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:51 +0530

காலமானவரின் ஓட்டுநர் உரிமம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களின் படி விபத்து சமயத்தில் காலமானவரின் வயது 56 என்று அறிய முடிகிறது. எனவே காலமானவரின் வயது 56 என எடுத்து கொள்ளலாம் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

பெருக்கீடுகள்

(ஈ) **மாதவருமானம்**

காலமானவர் விபத்து சமயத்தில், Business, Real estate and Agriculture வேலை செய்து மாதம் சுமார் ரூ.54,146/- சம்பாதித்து வந்ததாக மனு மற்றும் ம.சா.1 பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியம் அளித்துள்ளார். காலமானவரின் வருமான வரி அறிக்கை நகல் ம.சா.ஆ 11ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி காலமானவர் விபத்து சமயத்தில் மாத வருமானம் ரூ.54,146/- ஈட்டி வந்துள்ளதை அறிய முடிகிறது.

(உ) **எதிர்கால வரும்படி (Future Prospectus)**

காலமானவரின் வயது 56 என்றும், மாத வருமானம் ரூ.54,146/-என்றும் நிர்ணயம் செய்துள்ளதால் பிரணாய் சேத்தி முன் தீர்ப்பு படி கூடுதல் எதிர்கால வருமானம் (10 சதவிகிதம்) சேர்த்து காலமான நபரின் வருமானம் ரூ.59,560/- என்றால் ஒரு ஆண்டிற்கு கணக்கிட்டால் ரூ.7,14,720/- (ரூ.59,560/- x 12) வருகிறது.

(ஊ) **கழிவுகள் ((Deductions)**

விபத்து சமயத்தில் மனுதாரர்கள் காலமானவரின் வாரிசுகள் மசாஆ6ல் இருந்து அறிய முடிகிறது. எனவே, ரேஷ்மா குமாரி முன்தீர்ப்பு படி காலமானவரின் ஆண்டு வருமானத்தில் 1/4 பங்கினை கழிவாக எடுத்துக்கொள்ளலாம் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

ஆண்டு வருமானம் ரூ.7,14,720/-

1/4 கழிவு ரூ.1,78,680/-

மேற்கண்ட ஆய்விலிருந்து காலமான நபர் தனது குடும்பத்திற்கு ஆண்டிற்கு ரூ.5,36,040/- யை கொடுத்திருப்பார் என்று இத்தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:38:56 +0530

(எ) **<u>பெருக்கீடுகள்</u>**

காலமானவரின் வயது 56 என நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதால் சரளா வர்மா முன்தீர்ப்பின் படி அவருக்கு 9 பெருக்கீட்டினை எடுத்துக்கொள்ளலாம் என இத்தீர்ப்பாயம் கருதுகிறது.

(ஏ) **<u>சார்ந்தோர் இழப்பு (Loss of Dependency)</u>**

ஒரு ஆண்டிற்கு குடும்பத்திற்கு கொடுக்கப்படும் தொகையை பெருக்கீட்டின்படி பெருக்கும்போது சார்ந்தோர் இழப்பு தொகை கிடைக்கும். அதன்படி காலமானவர் ஒரு வருடத்திற்கு குடும்பத்திற்கு கொடுக்கும் ரூ.5,36,040/-ஐ பெருக்கீடு 9 உடன் பெருக்கினால் கீழ்க்கண்ட தொகை சார்ந்தோர் இழப்பீடாக கிடைக்கும் என இந்தத் தீர்ப்பாயம் கருதுகிறது.

வயது = 56

பெருக்கீடு = 9

ஒரு வருடத்திற்கு கொடுக்கும் தொகை ரூ.5,36,040/-

சார்ந்தோர் இழப்பு ரூ.48,24,360/- (ரூ.5,36,040/-X 9)

(ஐ) **<u>உறவு இழப்பு, பதவி இழப்பு, மற்றும் ஈமச்சடங்கு இழப்பு</u>**

<u>Loss of Consortium, Loss of Estate and Funeral Expenses</u>

மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிரனாய் சேத்தி முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரர்கள் காலமானவரின் மனைவி, மக்கள் என்ற வகையிலும் காலமானவரின் வாரிசுகள்/ சாா்ந்தவா்கள் என்பதால் அவருக்கு ஏற்பட்ட இழப்பு பணத்தால் ஈடு செய்ய இயலாது என்பதால் உறவு இழப்பிற்காக அவர்களுக்கு தலா ரூ.40,000/-ம் வழங்கியும், சொத்து இழப்பிற்காக ரூ.15,000/-மும், ஈமச்சடங்கிற்காக ரூ.15,000/-மும் (மாண்புமிகு உச்சநீதிமன்ற அரசியலமைப்பு அமர்வு முன்தீர்ப்பான பிரனய் சேத்தி வழக்கின் பத்தி 54ன் படி) வழங்குவது நீதியின்பால் சரியாக இருக்கும் என்று இந்தத் தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:01 +0530

முடிவாக, மனுதாரா்கள் கீழ்க்கண்ட தலைப்பில் கீழ்க்கண்ட தொகைகளை இழப்பீடாக பெறத் தகுதியுடையவர் என இந்தத் தீா்ப்பாயம் கருதுகிறது.

சாா்ந்தோா் இழப்பு	=	ரூ.**48,24,360/-**
உறவு இழப்பு	=	ரூ.1,60,000/-
சொத்து இழப்பு	=	ரூ.15,000/-
ஈமச்சடங்கு செலவு	=	ரூ.15,000/-
		==========
மொத்தம்	**=**	**ரூ.50,14,360/-**
		==========

9. முடிவில்,

இம்மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கான மொத்த சரியான இழப்பீடாக **ரூ.50,14,360/- என்பதை முழுமையாக ரூ.50,14,400/-** வழங்க வேண்டும் என்பதாக இத்தீா்ப்பாயம் நிா்ணயித்து கீழ்க்கண்டவாறு உத்தரவிடுகிறது.

A) மனுதாரர்களுக்கு 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு தொகை **ரூ.50,14,400/-** மற்றும் அதற்கான பின் வட்டியை மனு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை 7.5 சதவீத ஆண்டு வட்டியுடன், மனு தள்ளுபடி ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்தை கழித்துக் கொண்டு செலுத்த உத்தரவிடப்படுகிறது. மொத்த இழப்பீட்டுத் தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ.32,14,400/-மும் 2 முதல் 4ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.6,00,000/-ம் கிடைக்கக்கூடியது என இத்தீரப்பாயம் தீர்மானிக்கிறது. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:07 +0530

<u>B) தொகை செலுத்ததுவதற்கான நிபந்தனை உத்தரவு</u>

a) இழப்பீட்டுத்தொகை கோரிய மனுவில் மனுதாரர்கள் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.1,20,000/- இழப்பீட்டு தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ.49,516.50/- போக மீதி ரூ.70,483.50/-ஐ மனுதாரருக்கு திருப்பி செலுத்த உத்தரவிடப்படுகிறது.

b) மாண்புமிகு உச்ச நீதிமன்ற **"பர்மிந்தர் சிங் -எதிர்- ஹனி கோயல் மற்றும் பலர்", 2025 INSC 361** முன்தீர்ப்பு வழிகாட்டுதலின்படி 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர் வங்கி கணக்கிலேயே தனித்தனியாக **நேரடியாக** <u>இழப்பீட்டு தொகை மற்றும் அதனுடன் கூடிய வட்டியை மட்டும்</u> 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும், இது குறித்த தகவலை MCOP எண்ணையும் UTR எண்ணையும் குறிப்பிட்டு இத்தீர்ப்பாயத்திற்கு உரிய படிவம் (The format and procedure already directed by Hon'ble Madras High court in Suo Motu W.P. No. 12935 of 2021) மூலமாகவும் e-Mail (chnccc.sccmcop1-tn@indiancourts.nic.in) மூலமாகவும் 48 மணிநேரத்தில் தெரிவிக்க உத்தரவிடப்படுகிறது.

c) மனுதாரர் இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டியை செலுத்துவதற்ககுண்டான வங்கி கணக்கு விபரங்கள்:-

1ம் மனுதாரரின் பெயர் - Gunamathi,

வங்கி பெயம் மற்றும் கிளை	**வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code**
ICICI Bank, St. Thomas Mount	Ac NO: 103901000770 IFSC : ICIC0002348

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2026.08.13 18:39:14 +0530

2ம் மனுதாரரின் பெயர் - Dhanalakshmi

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code
ICICI Bank, St. Thomas Mount	Ac NO: 234801000270 IFSC : ICIC0002348

3ம் மனுதாரரின் பெயர் - Lakshmi Narayanan

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code
ICICI Bank, St. Thomas Mount	Ac NO: 234801501829 IFSC : ICIC0002348

4ம் மனுதாரரின் பெயர் - Prabakaran

வங்கி பெயம் மற்றும் கிளை	வங்கி கணக்கு எண் மற்றும் IFSC code
ICICI Bank, St. Thomas Mount	Ac NO: 234801501830 IFSC : ICIC0002348

d) வழக்கறிஞருக்குரிய கட்டணமாக ரூ.57,144/- நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மனுவுக்கான செலவுத் தொகை ரூ.1,06,725.50/- ஆகும். செலவுத் தொகையை (include Advocate fee) 2ம் எதிர்மனுதாரர் இவ்வுத்தரவு தேதியில் இருந்து 30 தினங்களுக்குள் தனியாக (Separate Deposit) இத்தீர்ப்பாயத்தின் கணக்கான "Registrar (MACT), Court of Small Causes, Chennai Account No. 7103261207 IFSC No. IDIB000M157 Indian Bank, Madras High Court Branch, Chennai" என்பதில் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும் இது குறித்த தகவலை MCOP எண்ணையும் UTR எண்ணையும் குறிப்பிட்டு இத்தீர்ப்பாயத்திற்கு உரிய படிவம் (The format and procedure already directed by Hon'ble Madras High court in Suo Motu W.P. No. 12935 of 2021) மூலமாகவும் e-

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:20 +0530

Mail (chnccc.sccmcop1-tn@indiancourts.nic.in) மூலமாகவும் 48 மணிநேரத்தில் தெரிவிக்க (The Manager, The Oriental Insurance Co. Ltd. -Vs- D Salsa and others, 2026 LiveLaw (Mad) 360) உத்திரவிடப்படுகிறது. மேற்கண்ட தொகையை மனுதாரரின் வழக்கறிஞர் உரிய மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

e) மனுதாரர்களின் வங்கி கணக்கு செயல்பாட்டில் இல்லாதது, முடிக்கப்பட்டது, தவறானது அல்லது 2ம் எதிர்மனுதாரரால் செலுத்தப்படும் பணம் செலுத்தம் வேறு ஏதேனும் காரணத்தினால் மின்னணு பணப்பரிமாற்றம் திரும்பப் பெறப்பட்டலோ, திருப்பி அனுப்பப்பட்டாலோ அல்லது தோல்வியடைந்தாலோ மட்டுமே, 2ம் எதிர்மனுதரா் காப்பீட்டு நிறுவனம் அது குறித்த ஆதரவு ஆவணங்களுடன் இந்த தீர்ப்பாயத்திற்கும் சம்பந்தப்பட்ட மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞருக்கும் தெரிவிக்க வேண்டும். மனுதாரா் அத்தகைய அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் சரியான மற்றும் செயல்பாட்டில் உள்ள வங்கி கணக்கு விவரங்களை இந்தத் தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் 2ம் எதிா்மனுதாரா் காப்பீட்டு நிறுவனம் இந்தத் தீர்ப்பாயத்தில் நிர்ணயிக்கப்படும் காலத்திற்குள் திருத்தப்பட்ட வங்கி கணக்கிற்கு இழப்பீடு தொகையை மீண்டும் நேரடியாக செலுத்த வேண்டும். <u>அத்தகைய தவறான அல்லது செயல்பாட்டில் இல்லாத கணக்கு விவரங்களால் ஏற்படும் எந்தவொரு கால தாமதத்திற்கும், 2ம் எதிா்மனுதாரா் காப்பீட்டு நிறுவனம் கூடுதல் வட்டிக்கு பொறுப்பாகாது.</u>

f) 2ம் எதிர்மனுதாரர் மேற்படி தொகைகளை உரிய காலத்தில் செலுத்த தவறும் பட்சம், மனுதாரர் மீதி நீதிமன்ற கட்டணத்தை இத்தீர்ப்பாயத்தில் செலுத்தி ஒப்புகை பெற்ற பின்னர், 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக உத்தரவை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து=தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:27 +0530

செய்யப்பட்ட பின்னர் இன்று 2026ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 13-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:31 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-</u>

ம.சா.1 - திருமதி. குணமதி
ம.சா.2 - திரு. கனகராஜ்

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1	காரின் பதிவுச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.2	புகார் அறிக்கை நகல்
ம.சா.ஆ.3	முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.4	மாதிரி வரைபட நகல்
ம.சா.ஆ.5	இறப்புச் சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.6	வாரிசு சான்றிதழ் நகல்
ம.சா.ஆ.7	பிரேதபரிசோதனை அறிக்கை நகல்
ம.சா.ஆ.8	காலமானவரின் ஓட்டுநர் உரிமம் அட்டை நகல்
ம.சா.ஆ.9	காலமானவரின் காரின் காப்பீட்டு நகல்
~~ம.சா.ஆ.10~~	~~பேருந்தின் காப்பீடு நகல்~~
ம.சா.ஆ.11	காலமானவரின் வருமான வரி அறிக்கை நகல்
ம.சா.ஆ.12	1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.13	2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.14	3ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.15	4ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
ம.சா.ஆ.16	1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.17	2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.18	3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.19	4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:35 +0530

ம.சா.ஆ.20	5ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக முதல் பக்க நகல்
ம.சா.ஆ.21	5ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல்
மூசாஆ.1	முதல் தகவல் அறிக்கை, இறுதி அறிக்கை, பேருந்து பயண சீட்டு அட்டை அடங்கிய தொகுப்பு நகல்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-

எமசா1 - திரு.நீலமேகம்

2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

எமசாஆ.1	எசா1ன் ஆதார் அட்டை நகல்

3ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-

எமசா2 - திரு.கமலக்கண்ணன்

3ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

எமசாஆ.2	எசா1ன் அங்கீகார கடித நகல்
எமசாஆ.3	கார் வாகனத்தின் காப்பீட்டு நகல்

நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:40 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.

மற்ற விவரங்கள்

மனு தாக்கல் செய்த தேதி	02/02/2017
தீர்ப்பு நாள்	13/08/2026
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டு தொகை	ரூ.1,20,00,000/-
தீர்ப்பாயம் வழங்கியுள்ள இழப்பீட்டு தொகை	**ரூ.50,14,400/-**
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.49516.50/-
ஏற்கனவே செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம்	ரூ.1,20,000/-
மனுதாரர்களுக்கு திருப்பி செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.70,483.50/-

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:45 +0530

செலவு பட்டியல்

செலவு விவரங்கள்	**தொகை**
விருது தொகைக்கான முத்திரை வரி	ரூ.49,516.50/-
வக்காலத்து நாமா	ரூ.5.00
சம்மன் பேட்டா தயாரித்தற்கான கட்டணம்	ரூ.60.00
வழக்கறிஞர் கட்டணம்	ரூ.57,144/-
மொத்தம்	ரூ.1,06,725.50/-

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2026.08.13 18:39:49 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீடு
கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
I சிறப்பு நீதிபதி, சிறு வழக்குகள் நீதிமன்றம்,
சென்னை.